தலைசிறந்த திறமை, கடமையில் மிகவும் கண்ணும் கருத்துமாயிருத்தல் ஆகியவைகளுக்கு மட்டுமே குடியரசுத் தலைவரின் காவலர்—தீயணைப்புப் படையினர் பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்றும் விதிக்கப்பட்டுள்ளது. இப் பதக்கம் பெறுவதற்குப் பரிவுரை செய்யப்பெறுபவர்கள் 20 ஆண்டுக் காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். ஒருவருக்கு முதல் முறை பதக்கம் அளிக்கப்பட்டதிலிருந்து 6 ஆண்டுகளேனும் கழிந்த பின்னர்தான் அவர் இரண்டாம் முறை பதக்கம் பெற இயலும்.

3. திறமையுடனும் மெச்சத் தக்க வகையிலும் நீண்ட காலம் பணியாற்றியிருப்பது உட்பட, கடமையுணர்வுடனும் கண்ணுங் கருத்துமாய் திறமை மிக்க, தலை சிறந்த பணியாற்றியதற்கே காவலர் பதக்கம் வழங்கப் படுகிறது. சாலச் சிறந்த திறமை பெற்றிருப்பவர்களுக்கே இப்பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பதக்கம் பெறு வதற்குப் பரிவுரை செய்யப்பெறுபவர்கள் 15 ஆண்டுகளேனும் பணியாற்றி யிருக்க வேண்டும்.

*Police Stations Anna Nagar.*

**84 *Q*—Thiru G. GOMATHY SANKARA DIKSHIDAR : Will the Hon'ble the Chief Minister be pleased to state whether Police Stations have been provided in Anna Nagar, Madras ?**

***A.*—No.**
இல்லை.

[குறிப்பு. —ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட் டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என் பதைக் குறிக்கும்.]

**2. நடைமுறைக் கேள்விகள்.**

**(i) வினா நேரத்தில் அவையில் அமைச்சர்கள் இல்லாதிருத்தல்.**

**திரு. பி. வேலுசாமி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் கேள்வி நேரம் என்பது இந்த அவையிலே மிகவும் முக்கியமான நேரம் என்று கருதுகிறேன். 3½ கோடி தமிழ் மக்களின் வாழ்விலே இருக்கும் பிரச்சினைகளை எல்லாம் நாம் எடுத்துச் சொல்லவும், சந்தேகங்களுக்கு விளக்கங்கள் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு இந்த நேரத்திலே தான் ஏற்படுகிறது. இம்மாதிரியான நேரத்திலே கூட அமைச்சர்கள் எல்லோரும் இல்லாதிருப்பதானது, வாஸ்தவமாகவே இந்தச்சபையின் நடவடிக்கைகளை அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்களோ என்று மற்றவர்கள் ஐயப்பாடு கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, துணைத் தலைவரவர்கள், எல்லா அமைச்சர்களும் கேள்வி நேரத்திலே இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே அமைச்சர் கள் அத்தனை பேரும் கேள்வி நேரத்தில் பொதுவாக இருக்க வேண்டு மென்பது தான் நியதி. ஆனால் முதலிலே தீர்மானித்தபடி 28-ஆம் தேதியோடு சட்டசபைக் கூட்டம் முடிந்துவிடும் என்றிருந்த காரணத்தினால் பல அமைச்சர்கள் வெளியூர்களில் சுற்றுப் பிரயாணம் செய்தல் முதலிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன. எனவே, எதிர்பாராத நிலை யிலே இவ்வாறு ஏற்பட்டு விட்டதே தவிர வரக்கூடாது என்ற காரணத்தி னால் அல்ல. இன்று 3 அமைச்சர்களுக்குக் கேள்விகள் போடப்பட் டிருந்தன. அதற்குரிய இரண்டு அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். ஒரு அமைச்சர் வரவில்லை. ஆகையால், எதிர் பாராமல் இவ்வாறு ஏற்பட்டுவிட்டதே தவிர திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றே செய்யவில்லை. கூடுமான வரையில் சட்டமன்றம் நடக்கும் பொழுதும்,

1968 ஆகஸ்ட் 29] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கேள்வி நேரம் நடைபெறும் பொழுதும் அமைச்சர்கள் அனைவரும் இருக்க வேண்டு மென்பது தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரை என்பதையும் கூறிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கேள்வி நேரம் மிகவும் இன்றியமையாதது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அமைச்சர்கள் அத்தனை பேரும் வந்திருந்து அவர்களுக் குரிய கேள்விகளுக்கு விடையளிப்பது தான் மரபாக இருக்க வேண்டும். ஆனால், அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல சில காரணங்களை முன்னிட்டு அமைச்சர்கள் வரவில்லை. அதிலும் மூன்று அமைச்சர்கள் வருவார்கள் என்று குறிப்பிட்டு அந்த மூன்று அமைச்சர்களுக்கும் அதிக மாகவே கேள்விகள் போட்டிருந்தோம். அதில் ஒரு அமைச்சருக்கு உடல் நிலை சரியாயில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். ஆகவே, எதிர் பாராத நிலையில் அவர் வரவில்லை. இனி, கேள்வி நேரத்தில் எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி நானும் பார்த்துக் கொள்கிறேன், அமைச்சரும் அதற்கு உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. This point has not been properly examined. What I am worried about is that under no circumstances, Hon. Ministers should go out of Madras when the House is in session. The Hon. Leader of the House tells me that we anticipated this House would finish its job early and later only the Ministers fixed these tours. They should have reasonably anticipated that the House might be extended by two or three days. In future at least the Hon. Ministers should take into their memory that their work should not conflict with the work of the Assembly. Their business should be so arranged that there should be no clash with the programme of the House.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் கூறியதை நான் முன்பே கூறிவிட்டேன். எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டேன். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால், சட்டமன்றக் கூட்டத் தொடர் 24-ம் தேதி முடிவடையும் என்பது பிறகு 28-ஆம் தேதியாக்கப்பட்டு, அதன் பிறகு 31-ம் தேதி என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இவ்வாறு மூன்று கட்டங்களிலே சட்ட மன்ற நிகழ்ச்சிகள் பற்றி முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அமைச்சர்கள் முன்பே போட்ட திட்டங்களின்படி பல இடங்களுக்குச் சென்று தீரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அமைச்சர்கள் நாட்டின் நலனைக் கவனிக்க பல இடங்களுக்குச் சென்று பல கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, இதைக் கட்டாயமாக இன்றியமையாத விதியாகப் போடுவதற்கு இயலாது. கூடுமான வரையில் எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டும். அதற்கு நானும் வகை செய்கிறேன் என்று கூறுகிறேன். இத்துடன் இந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு முடிவு கட்டி விடலாம்.

### 3. அவையுரிமைக் கேள்வி.

### அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றிய செய்தி உரிய காலத்திற்குமுன் வெளியீடு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப் பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் 23-8-1968 அன்று ஒரு ஒழுங்குப பிரச் சினையை எழுப்பினார்கள். 18-8-1968 அன்று பகல் 12 மணியளவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நம்முடைய துறைச் செயலாளர் அவர்களிடத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போகிறேன்